இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 138 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 13 – ஞாயிற்றுக்கிழமை 28 டிசம்பர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 138 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 13 - Sunday 28 December 2025 - Chennai 16 Pages ₹ 5.00

## டெல்லியில் கடுங்குளிர் வானிலை ஆய்வு மையம் மஞ்சள் எச்சரிக்கை!

புதுடெல்லி, டிச. 28 -

தலைநகர் டெல்லியில் கடுங்குளிர் மற்றும் அடர்ந்த பனிமூட்டம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.



**தற்போதைய வெப்பநிலை** : 11°C ஆகப் பதிவாகியுள்ளது. **குறைந்தபட்ச வெப்பநிலை:** இரவு நேரத்தில் குளிர் அதிகரித்து, வெப்பநிலை 7°C வரை குறைய வாய்ப்புள்ளது. **அதிகபட்ச வெப்பநிலை:** பகல் நேரத்தில் 20°C வரை நிலவக்கூடும்.

வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் அடர்த்தியான பனிமூட்டம் நிலவக்கூடும் என்பதால், இந்திய வானிலை ஆய்வு மையம் மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேற்கிலிருந்து மணிக்கு 4 முதல் 6 மைல் வேகத்தில் மெதுவான காற்று வீசுகிறது. ஈரப்பதம் 95% ஆக உள்ளதால் அதிகாலை நேரங்களில் பார்வைத்திறன் வெகுவாகக் குறைய வாய்ப்புள்ளது எனவும் இன்று 10% வரை லேசான மழை பெய்ய வாய்ப்பு எனவும் வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

பனிமூட்டம் மற்றும் கடுங்குளிர் காரணமாக வாகன ஓட்டிகள் கவனமுடன் இருக்குமாறும், பொதுமக்கள் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

## ஆன்லைன் மூலம் ரயில் டிக்கெட் முன்பதிவு!

### ஜனவரி 12 முதல் புதிய நடைமுறை!

சென்னை, டிச. 28 –

ஆன்லைன் மூலம் ரயில் டிக்கெட் முன்பதிவு செய்வதற்கு ஜனவரி 12 முதல் புதிய நடைமுறை அமலுக்கு வருகிறது.



டிக்கெட் முன்பதிவு தொடங்கும் நாளில் ஆதார் சரிபார்க்கப்பட்ட பயணாளர்கள் மட்டுமே டிக்கெட் முன்பதிவு செய்ய முடியும். ஏற்கனவே தட்கல் டிக்கெட் முன்பதிவுக்கு ஆதார் கட்டாயமாக்கிய நிலையில் வழக்கமான முன்பதிவுக்கும் ஆதார் கட்டாயமாகிறது. முறைகேடு களை தடுக்க, ஆதார் அட்டை இணைப்பை, ரயில்வே அறிமுகப்படுத்தி உள்ளது. இடைத்தரகர்கள் மொத்தமாக டிக்கெட் முன்பதிவு செய்வதை தடுக்க ரயில்வே நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய நடைமுறை டிச.29ம் தேதி தொடங்கி படிப்படியாக அமல்படுத்தப்படும் என ரயில்வே அறிவித்துள்ளது.

உண்மையான பயணிகள் மட்டும் முதல் நாளில் டிக்கெட் முன்பதிவு செய்வதை உறுதிசெய்யும் வகையில் புதிய நடைமுறை அமல்படுத்தப்படும். டிக்கெட் கவுன்ட்டர்களில் டிக்கெட் முன்பதிவு செய்பவர்கள் ஏதாவது ஒரு அடையாள ஆவணத்தை காட்டி டிக்கெட் பெறலாம் என ரயில்வே தெரிவித்துள்ளது.

ரயில் டிக்கெட் முன்பதிவு களில் முறைகேடுகளை தடுக்க ஐ.ஆர்.சி.டி.சி., இணையதளத்தில் காலை 8 மணி முதல் 10 மணி வரை ரயில் டிக்கெட் முன்பதிவு செய்ய ஆதார் இணைப்பு கட்டாயம் என்பது அமலில் இருக்கிறது. இந்த நடைமுறையில் புதிய மாற்றத்தை ரயில்வே வாரியம் கொண்டுவந்துள்ளது.

### ஒன்றிய பா.ஜ.க.வின் கொடுங்கோல் ஆட்சியாளர்களும் – கூஜா தூக்கும் அ.தி.மு.க. அடிமைகளும்

# கழக அரசின் சாதனைகளை மறைக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்!

## திருவண்ணாமலை – அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**திருவண்ணாமலை, டிச. 28 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2025) திருவண்ணாமலை மாவட்டம், மலப்பாம்பாடி, கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில், "ஒன்றிய பா.ஜ.க.வின் கொடுங்கோல் ஆட்சியாளர்களும், கூஜா தூக்கும் அ.தி.மு.க.வின் அடிமைகளும் கழக அரசின் சாதனைகளை மறைக்கவும், மறுக்கவும் முடியாமல் திண்டாடுகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2025) திருவண்ணாமலை மாவட்டம், மலப்பாம்பாடி, கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு விழாவில், 631 கோடியே 48 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவிலான 314 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 63 கோடியே 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 46 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என். அண்ணாதுரை, தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ. கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மேயர் திருமதி வி.நிர்மலா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

ஆர்வத்துடன் திரண்டிருக்கின்ற உங்களையெல்லாம் பார்க்கும்போது, எனக்குள்ளே ஒரு புது 'எனர்ஜி' பிறக்கின்றது. திருவண்ணாமலை என்று சொன்னதும், ஜவ்வாதுமலை போன்ற எழில் கொஞ்சும் மலைகளின் அழகை ரசிக்கிறதா! இல்லை, உங்கள் முகத்தில் தெரிகின்ற மகிழ்ச்சியை ரசிக்கிறதா! என்று தெரியாமல் உங்கள் முன்பு நின்றுகொண்டிருக்கிறேன்.

### ஏராளமான பெருமைகள் கொண்ட திருவண்ணாமலை மாவட்டம்!

ஆன்மீகத்தில் ஒளி வீசி, தமிழ்நாட்டிலேயே மிக உயர்ந்த 217 அடி ராய கோபுரம் கொண்டு, ஆன்மீக அன்பர்களையும் ஈர்க்கின்ற இடம், இந்தத் திருவண்ணாமலை!

கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் பாறை ஓவியங்கள் கருவிகள், தொல்லியல் அகழாய்வில் முத்திரை பதிக்கும் கீழ் நமண்டி என்று நம்முடைய வரலாற்றுச் சுவடும் நிறைந்து இருக்கின்ற இந்த மாவட்டத்திற்கு ஆரணி அரிசி, ஆரணி பட்டு, படவேடு வாழை, மொடையூர் சிற்பங்கள் என்று ஏராளமான பெருமைகள் இருக்கின்றது!

### பெருமைகளுக்குப் புகழ்சேர்த்து புதுவளர்ச்சி காணுவோம்!

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, முதல் நாடாளுமன்ற உறுப்பினரை அளித்த வரலாற்றுப் பெருமையும் இந்த மண்ணிற்கு உண்டு! இந்தப் பெருமைகளுக்குப் புகழ் சேர்த்து, புது வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குதான், நம்முடைய திராவிட மாடல் அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது!

### எதிலும் வல்லவர் அமைச்சர் எ.வ.வேலு!

கடந்த 14ஆம் தேதிதான், இதே திருவண்ணாமலைக்கு வந்து, இதே இடத்தில், எழுச்சிமிகு தி.மு.க. இளைஞரணியின் மாநாட்டில் பங்கேற்றேன். இரண்டு வாரத்திற்குள், மீண்டும் திருவண்ணாமலைக்கு வந்து, உங்கள் எல்லோருடனும் பேசுகின்றவாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது!

இந்த வாய்ப்பின் மூலமாக, 631 கோடியே 48 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவிலான, 314 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, 63 கோடியே 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 46 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 2 இலட்சத்து 66 ஆயிரத்து 194 பேருக்கு ஆயிரத்து 400 கோடியே 57 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற விழாவாக ஏற்பாடு செய்திருக்கிறார், எதிலும் வல்லவரான நம்முடைய மாண்புமிகு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள்!

### நமது அரசுக்கு காலத்தால் அழியாத புகழ் சேர்ப்பவர் அமைச்சர் எ.வ.வேலு!

புதுமையும் - கலைநயமும் - பிரமாண்டமும் நிறைந்த கட்டடங்களை உருவாக்கி, காலத்தால் அழியாத புகழை நம்முடைய அரசுக்கு சேர்த்துக் கொண்டிருப்பவர்தான் நம்முடைய எ.வ.வேலு அவர்கள்! அவருக்குத் துணையாக நின்று, திருவண்ணாமலையை எல்லோரும் அண்ணாந்து பார்க்கின்ற மலையாக வளர்த்தெடுக்கின்ற தமிழ் ஆர்வலர், மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ் அவர்களுக்கும், மாவட்ட அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2025ஆம் ஆண்டு நிறைவடையக்கூடிய நேரத்தில் உங்கள் எல்லோரையும் சந்திக்க வந்திருக்கிறேன். நிறைவான பல திட்டங்களைச் செய்திருக்கிறோம் என்ற அந்த உணர்வுடன் வந்திருக்கிறேன்!

### நான்கரை ஆண்டுகளில் நாடே போற்றும் ஏராளமான திட்டங்கள்!

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்து நான்கரை ஆண்டுகள் ஆகிறது... இந்த நான்கரை ஆண்டுகளில், நாடே போற்றும் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்! நம்முடைய ஆட்சியின் ஒவ்வொரு திட்டமும், தமிழ்நாட்டில், ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று சேரவேண்டும் என்று கவனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# கல்வி - கல்வி நிறுவனங்களை பலவீனப்படுத்த பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். சதி!

## காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச. 28 -

கல்வி மற்றும் கல்வி நிறுவனங்களை பலவீனப்படுத்த பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கூட்டணி சதி செய்வதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.



இதுகுறித்து பேஸ்புக்கில் ராகுல் காந்தி வெளியிட்ட பதிவில், "சமீபத்தில் 'மக்கள் நாடாளுமன்றத்தில்' (Students' Parliament) இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் (ISI) மாணவர்களைச் சந்தித்தேன். நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்து எழுப்பி வரும் அதே தீவிரமான கவலைகளை அந்த மாணவர்களும் எழுப்பினர்.

ஐ.எஸ்.ஐ. நிறுவனம் படிப்படியாக ஆர்எஸ்எஸ் மூலம் நிறுவன ரீதியாகக் கையகப்படுத்தப்பட்டு வருவதாக மாணவர்கள் தெரிவித்தனர். ஐ.எஸ்.ஐ. என்பது ஏதோ ஒரு சாதாரண நிறுவனம் அல்ல. அது புள்ளியியல், கணிதம், பொருளாதாரம், தரவு அறிவியல், கணினி அறிவியல் மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றில் உயர் மட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, நாட்டுக்கு உலகத் தரம் வாய்ந்த நிபுணர்களை உருவாக்கியுள்ளது.

கல்வியாளர்களால் நடத்தப்பட வேண்டிய கல்வி நிறுவனங்கள் இப்போது அதிகாரத்துவ மற்றும் சித்தாந்தத் தலையீட்டை எதிர்கொள்கின்றன. பாடத்திட்டமும் ஆராய்ச்சியும் கூட ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இது கல்விச் சீர்திருத்தம் அல்ல, மாறாக இளைஞர்களின் எதிர்காலத்தை இருளில் தள்ளுவதற்காகவும், கல்வி மற்றும் கல்வி நிறுவனங்களை பலவீனப்படுத்துவதற்கான ஒரு சதித் திட்டம். இந்தத் தாக்குதல் நிறுவனங்கள் மீது மட்டுமல்ல, நாட்டின் அறிவுசார் சுதந்திரம், அறிவியல் மனப்பான்மை மற்றும் அதன் இளைஞர்களின் எதிர்காலத்தின் மீதும் தொடுக்கப்பட்டுள்ளது. இதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். கல்விக்கு சுதந்திரம் தேவை நிறுவனங்கள் சித்தாந்தத்தால் அல்ல, அறிவு மற்றும் அறிவியலால் இயக்கப்படும்." என்று கூறினார்.

ராகுல் காந்தி பேஸ்புக் பதிவில், அமெரிக்காவால் விதிக்கப்பட்ட வரிகளின் விளைவாக பதோஹியைச் சேர்ந்த நெசவாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாக கூறினார்.

அவர், "நான் ஏற்கனவே கூறி யிருந்தேன் 'ட்ரம்ப்பின் வரிகள் ஒரு பொருளாதாரப் புயலாக மாறப்போகின்றன, இது மில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்கும்.

ஆனால் நரேந்திர மோடி அமைதியாக அமர்ந்திருக்கிறார். இன்று, பதோஹியின் நெசவாளர்கள் அதே எச்சரிக்கையின் யதார்த்தத்தை எடுத்துரைக்கிறார்கள். ஒரு காலத்தில் 'கம்பள நகரம்' என்று அழைக்கப்பட்ட பதோஹி, இப்போது அவதூறுக்கு ஆளாகியுள்ளது.

அமெரிக்காவின் இந்தியாவுக்கு எதிரான வரி விதிப்புக் கொள்கை நாட்டின் பல தொழில்களில் பயங்கரமான விளைவை ஏற்படுத்தியுள்ளது. அதனால் பதோஹியின் கம்பள வர்த்தகம் கிட்ட த்தட்ட அழிக்கப்பட்டு விட்டது.

இதன் விளைவாக, ஏற்றுமதி சீராகக் குறைந்து வருகிறது. இந்த வர்த்தகம் வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளுக்கு மாறி வருகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் மக்களவைத் தொகுதியான வாரணாசியின் உண்மை நிலை இது தான்." என்று ராகுல் காந்தி கூறினார்.

### கார்கே தலைமையில்

## காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம்!

புதுடெல்லி, டிச. 28 –

காங்கிரஸ் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் புதுடெல்லியில் கூடியது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைமையகமான இந்திரா பவனில் நேற்று கூடிய இந்தக் கூட்டத்தில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர சோனியா காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், இமாச்சலப்பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு, கர்நாடக முதல்வர் சித்தராமையா, தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ஹரிஷ் ராவத், சல்மான் குர்ஷித், ராஜீவ் சுக்லா, அபிஷேக் மனு சிங்வி, சசி தரூர், அனைத்து மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு, கேரளா, அசாம், மேற்கு வங்கம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவை பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதால் அது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### தேவாலயங்கள் – பாதிரியார்கள் மீது தாக்குதல்!

# பிரதமர் மோடியின் இரட்டை வேடம்!

## ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. பேட்டி!

சிவகங்கை. டிச. 28 –

சிவகங்கையில் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி . செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

தமிழகத்தில் தி.முக.வுடன் 2026 தேர்தல் குறித்து பேசுவதற்காக அகில இந்திய காங்கிரஸ் தலைமை 5 பேர் கொண்ட குழுவினை அமைத்துள்ளார்கள். அவர்கள் தி.மு.க. தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசி உள்ளார்கள். தொடர்ந்து படிப்படியாக அவர்கள் பேசி ஒரு முடிவினை எடுப்பார்கள்.



ஒரிசா, உத்தரகாண்ட் போன்ற பல்வேறு மாநிலங்களில் 2008 ஆம் ஆண்டு முதல் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை கைது செய்வதற்காக சிறப்பு தனிப்படை பொலிட்பீரோ அமைக்கப்பட்டது. அவர்கள் தொடர்ச்சியாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். பல பேர் கொல் லப்பட்டார்கள். பல பேர் கைது செய்யப்பட்டார்கள்.

அதன் தொடர்ச்சியாக இன்று ஒடிசாவில் மாவோயிஸ்டர்கள் சரணடைகிறார்கள்.

இது 2008வது முதல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும் . இதன் தொடர் நிகழ்ச்சி தான் அவர்கள் சரண் அடைகிறார்கள். இது பிரதமர் மோடி செய்த சாதனையாகாது. இது ஒரு தொடர் நடவடிக்கைஆகும். ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் எடுத்த தொடர் நடவடிக்கையாகும். அவர்களை முழுமையாக ஒழிக்க முடியாது.

பிரதமர் மோடி 11 ஆண்டுகளுக்கு பிறகு டெல்லியில் கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கிறார். அதே நாளில் வட மாநிலங்களில் சர்ச்சுகளில் பாதிரியார்கள், குழந்தைகள் மீது தாக்குதல் நடைபெறுகிறது. இது எவ்வாறு எந்த விதத்தில் நியாயமாகும். இத்தகைய தாக்குதலில் ஈடுபட்டவர்கள் உடனடியாக கைது செய்டப்படவேண்டும்.

தமிழகத்தில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி போராட்டம் நடத்துவதாக அறிவித்துள்ளார்கள். தேர்தல் நேரத்தில் இத்தகைய போராட்டங்கள் நடைபெறுவது வழக்கம்தான். ஆனால் அரசு அவர்களை முறையாக அழைத்து பேசி பிரச்சினையை தீர்க்க முன்வர வேண்டும்.

தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட மகளிர் உரிமைத் தொகை வழங்குவது மகளிரிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதனால் பொருளாதார ரீதியில் குடும்பங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். பல்வேறு மாநிலங்களில் பல பெயர்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உலகம் முழுவதும் இதை வரவேற்றுள்ளார்கள்.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. கூறினார்.